**செய்தி வெளியீடு எண்: 879** **நாள்: 05.12.2018**

**செய்தி வெளியீடு**

பதிவுத்துறையின் https://tnreginet.gov.in என்ற இணையதளத்தைப் பயன்படுத்தி பொதுமக்கள் / ஆவண எழுத்தர்கள் / வழக்கறிஞர்கள் ஆகியோர் ஆவணம் தயாரிக்கும்போதோ அல்லது இணையதளத்தில் ஆவணச்சுருக்கத்தை உட்புகுத்தும்போதோ ஆவணதாரர்களின் அலைபேசி எண்ணை உள்ளீடு செய்ய மென்பொருளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆவணதாரர்கள் தங்களது சரியான அலைபேசி எண்ணை உள்ளீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆவண எழுத்தர் / வழக்கறிஞர் மூலம் ஆவணம் தயார் செய்யப்படும்போது ஆவணதாரர்கள் தங்களது அலைபேசி எண் தவறாது உள்ளீடு செய்யப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு ஆவணதாரர்கள் தங்களது அலைபேசி எண்ணை வழங்கும்பட்சத்தில் ஆவணப்பதிவின் 33 வெவ்வேறு நிலைகளில் குறுஞ்செய்தி தமிழ் அல்லது ஆங்கில மொழியில் பெற்று தங்கள் ஆவணத்தின் நிலையை அறிந்துகொள்ளலாம்.

சில முக்கியமான குறுஞ்செய்தி அனுப்பப்படும் நிலைகள்:

1) ஆவணப்பதிவிற்காக முன்பதிவு செய்தவுடன் அது தொடர்பான குறுஞ்செய்தி.
2) ஆவணம் பதிவு செய்யாமல் நிலுவை வைக்கும் நிகழ்வுகளில் என்ன காரணத்திற்காக நிலுவை வைக்கப்படுள்ளது என்ற குறுஞ்செய்தி.
3) ஆவணம் நிலுவையிலிருந்து விடுவிக்கப்பட்டு பதிவு செய்யப்படும்போது அதற்கான குறுஞ்செய்தி.
4) ஆவணம் திரும்ப வழங்க தயாராக உள்ளபோது அதற்கான குறுஞ்செய்தி.
5) பட்டா மாறுதல் தேவைப்படும் ஆவணங்களுக்கு பட்டா மாறுதல் படிவம் கிராமங்களைப் பொறுத்து வருவாய் துறைக்கு அனுப்பப்பட்டதற்கான ஒப்புதல் குறுஞ்செய்தி.
6) ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்தவுடன் அச்சொத்து தொடர்பான முன்பதிவு ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றவருக்கு தங்களின் சொத்து பதிவுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற குறுஞ்செய்தி.
7) மனை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய ஆவணங்களுக்கு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் மற்றும் குறைவு முத்திரைத்

Verified RealEstate

தீர்வை / பதிவு கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் அதன் விவரத்திற்கான குறுஞ்செய்தி.

8) உரிய முகமதிப்பிற்கான முத்திரைத்தீர்வை செலுத்தாத ஆவணங்களுக்கு அது குறித்த குறுஞ்செய்தி.

9) கட்டடத்துடன் கிரையம் செய்யப்படும் நிகழ்வுகளில் கட்டடக் களப்பணி மேற்கொண்டபின் இழப்பு உள்ளதா என்ற விவரமும் இழப்பு உள்ளது எனில் கட்ட வேண்டிய தொகை குறித்து குறுஞ்செய்தி.

10) மதிப்புக் குறைவு உள்ள ஆவணங்களில் காரணம் கோரும் குறிப்பாணை, சந்தை மதிப்பு நிர்ணய ஆணை பிறப்பிக்கப்பட்ட விவரங்களும், செலுத்த வேண்டிய குறைவு முத்திரைத் தீர்வை, குறைவு பதிவுக் கட்டணம் போன்ற விவரங்கள் பற்றிய குறுஞ்செய்தி.

11) இணையதளம் மூலம் வில்லங்கச்சான்று / சான்றிட்ட நகல் கோரி விண்ணப்பிக்கப்பட்ட இனங்கள் தயாரிக்கப்பட்டவுடன் தயார் நிலை குறித்த குறுஞ்செய்தி.

வேறொருவரின் அலைபேசி எண்ணை உட்புகுத்தும் நிலையில் மேற்கண்ட குறுஞ்செய்திகள் அனைத்தும் தவறான அலைபேசி எண்ணுக்கே சென்றடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, ஆவணதாரர்கள் தங்களின் சரியான அலைபேசி எண்ணை அளிப்பதன் மூலம் ஆவணத்தின் நிலையை குறுஞ்செய்தியின் வழி அறிந்துகொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

Verified RealEstate